# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2021 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*(2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2021, சனவரி மாதம் 22 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2021 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்**

[*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ. - ஓ. 43/2016*

**(19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 3, 18அ, 120, 138, 158, 159, 160, 225 மற்றும் 256அ என்னும் பிரிவுகளில் தவிர, "இலங்கை" என்னும் சொல் அதில் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக, "இலங்கை" என்னும் சொல் இடப்படுதல் வேண்டும். *19 ஆம் அத்தியாயத்தில், "இலங்கை" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "இலங்கை" என்னும் சொல்லை மாற்றீடு செய்தல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19, 115 மற்றும் 120 ஆம் பிரிவுகளில் தவிர, "இராணி" என்னும் சொல் அதில் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக, "குடியரசு" என்னும் சொல் இடப்படுதல் வேண்டும். *முதன்மைச் சட்டவாக்கத்தில், "இராணி" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "குடியரசு" என்னும் சொல்லை மாற்றீடு செய்தல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

"குடியரசு. 12. "குடியரசு" என்னும் சொல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசைக் குறித்துக் காட்டுகின்றது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை நீக்குதல்*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"அரசாங்கம்.*

14. "அரசாங்கம்" என்னும் சொல், ஏதேனும் விவரண அல்லது விசேடிக்கும் சொற்களினால் அல்லது சந்தர்ப்பத்தினால் வேறேதேனும் பொருள் சுட்டப்படாதவிடத்து, அத்துடன் "இலங்கை அரசாங்கம்" அல்லது "இலங்கையின் அரசாங்கம்" என்னும் சொல்லமைப்பு, 1978 ஆம் ஆண்டின் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினால் அமைத்துருவாக்கப்பட்ட அரசாங்கம் என்று பொருளாகும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*""இத்தீவு" அத்துடன் "இலங்கை."*

15. "இத்தீவு" அத்துடன் "இலங்கை" என்னும் சொற்கள், முறையே "இலங்கைத் தீவை"க் குறித்துக் காட்டுகின்றன.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"சனாதிபதி.*

16. "சனாதிபதி" என்னும் சொல், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி என்று பொருளாகும் என்பதுடன் அவரது பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்று வதற்கும் முறையாக நியமிக்கப்பட்ட அல்லது பதவிப்பெயர் குறிக்கப்பட்ட எவரேனுமாளையும் உள்ளடக்குதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அதன் (ஆ) என்னும் எடுத்துக்காட்டை விட்டுவிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவைத் திருத்துதல்*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவு, ''இலங்கைச் சட்டமாக்கற் துறையின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கைச் சட்டமாக்கற்றுறையின் ஏதேனும் சட்டத்தின்கீழ் அல்லது அதன் பயனாக அல்லது 1946 ஆம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் விதிகள் அல்லது ஒழுங்குவிதிகளின்கீழ் எத்தகைய ஏதேனும் நோக்கத்துக்காகவான ஏதேனும் தேர்தலைக் குறிக்கும்.'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தாற்றிருத்தப்படுகின்றது.

(1) ''முதலாவதாக'' என்னும் சொல்லிலிருந்து, ''ஆணைபெற்ற அலுவலர் ஒவ்வொருவரும்.'' என்னும் சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலமும்:-

''முதலாவதாக - சனாதிபதியினால் அல்லது சனாதிபதியின் அதிகாரத்தின்கீழ் வழங்கப்பட்ட அல்லது செய்யப் பட்ட ஏதேனும் ஆணையின் அல்லது ஆணைப்பத்திரத்தின் அல்லது வேறு செயலின் பயனாக இலங்கையில் ஏதேனும் பதவியை வகிக்கும் ஆள் ஒவ்வொருவரும்.

இரண்டாவதாக - இலங்கை நிருவாகசேவை உறுப்பினர் ஒவ்வொருவரும்.

மூன்றாவதாக - இலங்கைக் குடியரசின் கடல், இராணுவ அல்லது வான்படைகளிலுள்ள ஆணைபெற்ற அலுவலர் ஒவ்வொருவரும்; அத்துடன்

(2) அதன் எடுத்துக்காட்டில். ''பொலிசு விதானையாளரொருவர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கிராம சேவை அலுவலரொருவர்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு, "மனைவியின்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''வாழ்க்கைத்துணையின்'' என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு, "சனாதிபதி" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "சனாதிபதி" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவைத் திருத்துதல்

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவு, அதன் எடுத்துக்காட்டில், ''அரசாங்கத்துக்கெதிராக யுத்தஞ் செய்வதற்காகக்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குடியரசுக்கெதிராக யுத்தஞ் செய்வதற்காகக்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவு, "அல்லது இராணியை, இலங்கையில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் அல்லது மாட்சிமைதங்கிய இராணியின் அதிகாரப்பரப்புகளில் அல்லது ஆள்புலங்களில் அவரது இறைமையை இழப்பித்தற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கைக் குடியரசின் மக்களை, இலங்கையில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் அவர்களது இறைமையை இழப்பித்தற்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 119 ஆம் பிரிவைத் திருத்துதல்

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 119 ஆம் பிரிவு, பின்வருவனவற்றை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(1) ''மகாதேசாதிபதியின் அல்லது மேலவை உறுப்பினரின் அல்லது பாராளுமன்ற உறுப்பினரின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, அப்பிரிவில் அச்சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் ''சனாதிபதியின் அல்லது பாராளுமன்ற உறுப்பினரின்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) ஓரக்குறிப்பில், ''மகாதேசாதிபதியைத்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''சனாதிபதியைத்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 120 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 120 ஆம் பிரிவு இத்தாற்றிருத்தப்படுகின்றது.

(1) ''இராணிக்கு அல்லது இலங்கையிலுள்ள அவரது அரசாங்கத்துக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''சனாதிபதிக்கு அல்லது இலங்கையிலுள்ள அவரது அரசாங்கத்துக்கு'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) முறையே ''இராணியின் பிரசையை'' மற்றும் ''பிரசைகளை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கை மக்களை'' மற்றும் ''மக்களை'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அதன் விளக்கத்தில்–

(அ) ''இராணி பிறழ் வழிப்படுத்தப்பட்டுள்ளார் அல்லது கையாண்ட நடபடிக்கைகளில் பிழையிழைத்துள்ளார் அல்லது இலங்கையிலுள்ள அவரது அரசாங்கம் பிறழ்வழிப்படுத்தப்பட்டது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''சனாதிபதி பிறழ்வழிப்படுத்தப்பட்டுள்ளார் அல்லது கையாண்ட நடபடிக்கைகளில் பிழையிழைத்துள்ளார் அல்லது குடியரசின் அரசாங்கம் பிறழ்வழிப்படுத்தப்பட்டது'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) ''இராணியின் பிரசை'' என்னும் சொற்கள் விளக்கத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, ''இலங்கை மக்கள்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 138 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 138 ஆம் பிரிவு, இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(1) ''மாட்சிமை தங்கிய இராணியின் இலங்கையிலுள்ள அரசாங்கத்தை அல்லது மேலவையை அல்லது மக்கள் பிரதிநிதிகள் சபையை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''குடியரசின் அரசாங்கத்தை அல்லது பாராளுமன்றத்தை'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) ''இலங்கை மகாதேசாதிபதியினது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''குடியரசின் சனாதிபதியினது'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவு, ''இலங்கை அரசாங்கத்துடனான'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''குடியரசின் அரசாங்கத்துடனான'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவு, ''மேலவையுடனான அல்லது மக்கள் பிரதிநிதிகள் சபையுடனான அல்லது இலங்கையின் நிறைவேற்று அரசாங்கத்துடனான'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பாராளுமன்றத்துடனான அல்லது குடியரசின் நிறைவேற்று அரசாங்கத்துடனான'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவு, இத்தாற்றிருத்தப்படுகின்றது.

(1) ''மேலவையுடனான அல்லது மக்கள் பிரதிநிதிகள் சபையுடனான அல்லது இலங்கையின் நிறைவேற்று

அரசாங்கத்துடனான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பாராளுமன்றத்துடனான அல்லது குடியரசின் நிறைவேற்று அரசாங்கத்துடனான" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் எடுத்துக்காட்டில், "வழக்குரைஞர் ஒருவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சட்டத்தரணி ஒருவர்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 162 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 162 ஆம் பிரிவு இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(1) "அரசாங்கத்துக்கு" என்னும் சொல்லுக்குப் பதிலாக "குடியரசுக்கு" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் ஓரக்குறிப்பில், "அரசாங்கத்துக்கு" என்னும் சொல்லுக்குப் பதிலாக "குடியரசுக்கு" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 191 ஆம் மற்றும் 192 ஆம் பிரிவுகளைத் திருத்துதல்*

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 191 ஆம் மற்றும் 192 ஆம் பிரிவுகள், "இச்சட்டக்கோவையினால் அல்லது இங்கிலாந்துச் சட்டத்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டக்கோவையினால் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் சட்டவாக்கத்தால்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 225 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 225 ஆம் பிரிவு இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(1) "இலங்கை அரசாங்கத்தின் அதிகாரத்தினால் அல்லது 1941 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, நாணயக் கட்டளைச்சட்டத்தின்கீழ் அல்லது இலங்கையில் நாணயங்கள் வழங்கப்படுவது தொடர்பில் அப்போதைக்கு நடைமுறையில் உள்ள ஏதேனும் சட்டவாக்கத்தின்கீழ் அல்லது மாட்சிமைதங்கிய இராணியின் அதிகாரப் பரப்புகளில் அல்லது

ஆள்புலங்களில் ஏதேனும் பாகத்தில் உள்ள அரசாங்கத்தின் அதிகாரத்தினால்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''இலங்கை அரசாங்கத்தின் அதிகாரத்தினால் அல்லது 1941 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, நாணயக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அல்லது (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின்கீழ் அல்லது இலங்கையில் குற்றிநாணயங்களை வழங்குதல் தொடர்பாக அப்போதைக்கு நடைமுறையில் உள்ள ஏதேனும் சட்டவாக்கத்தின்கீழ்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) ''இலங்கையில் அல்லது மாட்சிமைதங்கிய இராணியின் அதிகாரப்பரப்புகளில் அல்லது ஆள்புலங்களில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''இலங்கையில்'' என்னும் சொல்லை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 256அ என்னும் பிரிவைத் திருத்துதல்*

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 256அ என்னும் பிரிவு, ''இலங்கையிலுள்ள மாட்சிமைதங்கிய இராணியின் அரசாங்கத்தையும் அத்துடன் மாட்சிமைதங்கிய இராணியின் அதிகாரப் பரப்புகளில் அல்லது ஆள்புலங்களில் ஏதேனும் பாகத்தில் உள்ள அரசாங்கத்தையும் ஏதேனும் வெளிநாட்டிலுள்ள அரசாங்கத்தையும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஏதேனும் வெளிநாட்டிலுள்ள அரசாங்கத்தை'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 398 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 398 ஆம் பிரிவு, அதன் (அ) என்னும் எடுத்துக்காட்டில் ''சிவில் சேவையில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''இலங்கை நிருவாக சேவையில்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 449 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 449 ஆம் பிரிவு, ''முடிக்கு'' என்னும் சொல்லுக்குப் பதிலாக ''அரசுக்கு'' என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 468 ஆம் பிரிவு, "மாட்சிமைதங்கிய இராணியின் அதிகாரப்பரப்புகளில் அல்லது ஆள்புலங்களின் ஏதேனும் பாகத்தில் அல்லது ஏதேனும் வெளிநாட்டில்" என்னும் சொற்கள் அப்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "இலங்கையில் அல்லது ஏதேனும் வெளிநாட்டில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 468 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 478அ என்னும் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 478அ என்னும் பிரிவைத் திருத்துதல்*

"(ஆ) "தாள் நாணயம்" என்பது, 1941 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, தாள்நாணயக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அல்லது (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின் கீழ் அல்லது இலங்கையில் தாள்நாணயம் வழங்குதல் தொடர்பாக அப்போதைக்கு நடைமுறையிலுள்ள ஏதேனும் சட்டவாக்கத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு தாள் நாணயம் என்று பொருளாகும் என்பதுடன், ஏதேனும் வெளிநாட்டு அரசினால் அல்லது அதன் சார்பில் வழங்கப்பட்ட, எவ்வகைப் பெயரினாலும் அழைக்கப்படும், அதுபோன்ற தன்மையினதான ஏதேனும் பத்திரத்தையும் உள்ளடக்கும்.".

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 485 ஆம் பிரிவு, "மாட்சிமைதங்கிய இராணியின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குடியரசின்" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 485 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**31.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*